# கற்பிட்டி பிரதேச சபை
# புத்தளம் மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 யூலை 01 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 25 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 செப்தெம்பர் 30 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, கற்பிட்டி பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கற்பிட்டி பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

திண்மக் கழிவுப் பொருட்கள் செயற்திட்டத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட 05 கட்டிடங்களின் ரூபா 5,070,362 தொகை, கன்தகுளிய முன்பள்ளி கட்டிடப்

பெறுமதியான ரூபா 319,879 தொகையும் அன்பளிப்பாகக் கிடைக்கப்பெற்ற ரூபா 72,675 பெறுமதியான புத்தக இருப்பும் நிலையான சொத்துக் கணக்குகளிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

**(அ) பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்**

2013 ஒக்டோபர் 30 ஆம் திகதி வரையிலும் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டிராததுடன் அவ் ஐயவினாக்களுக்கு உட்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் கணிப்பிடப்படக்கூடிய பெறுமதி ரூபா 22,486,429 ஆகக் காணப்பட்டது.

**(ஆ) தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் ரூபா 64,382,512 கூட்டுத்தொகையான கொடுக்கல்வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**(இ) கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமை**

ரூபா 1,873,603 கூட்டுத்தொகையான 28 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் 2013 செப்தெம்பர் 09 ஆம் திகதி வரை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய

வருமானம் ரூபா 5,370,586 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 6,861,979 ஆக இருந்தது.

## 2.2 நிதிக் கட்டுப்பாடு

பின்வரும் நிதிக் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 04 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 10,696,336 ஆக இருந்ததுடன், அவ் விடயங்களுக்கு உரித்தாகப் பேணப்பட்ட பட்டோலைகளின் பிரகாரம் அக்கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 9,585,139 ஆக இருந்தமையால் ரூபா 1,111,197 தொகையான வேறுபாடு கணக்குகளில் காணக்கூடியதாக இருந்தது.

(ஆ) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சபையால் வெளித்தரப்பினருக்குச் செலுத்தப்பட வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 26,631,294 ஆகக் காணப்பட்டதுடன் இதில் ஒரு வருட காலத்திற்கு மேலான கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 20,407,855 ஆகக் காணப்பட்டது.

(இ) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் படி பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 22,682,973 ஆகக் காணப்பட்டதுடன் இதில் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 9,001,008 ஆகக் காணப்பட்டது.

(ஈ) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்ட ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 5,612,492 ஆகக் காணப்பட்டதுடன் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட மீதிகளின் பெறுமதி ரூபா 4,695,124 ஆகக் காணப்பட்டது. இதில் இறந்த, ஓய்வு பெற்ற மற்றும் சேவையை விட்டு விலகிச் சென்ற 58 ஊழியர்களில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாது நிலுவையாகக் காணப்பட்ட கடன் மீதிகளின் பெறுமதி ரூபா 178,193 ஆகக் காணப்பட்டது.

(உ) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு வருடத்திற்கு மேலாக அசைவற்று இருக்கும் சொத்துக்களின் பெறுமதி ரூபா 277,080 ஆகக் காணப்பட்டது.

(ஊ) பின்வரும் வரித் தொகை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்படாது கையில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

| | | ரூபா |
|---|---|---|
| I | பெறுமதி சேர் வரி | 2,058,408 |
| II | தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி | 30,039 |
| III | பொருட்கள் மற்றும் சேவைகள் வரி | 289,387 |

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 6,720 | 1,602 | 5,118 |
| (ii) | வாடகை | 12,623 | 5,343 | 7,280 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,770 | 1,611 | 159 |
| (iv) | ஏனைய வருமானம் | 35,968 | 26,214 | 9,754 |

## 2.3.2 நீதிமன்ற தண்டபணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 2,255,757 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 7,498,168 |

## 2.4 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான பௌதீக வளங்கள்

ரூபா 3,202,000 பெறுமதியான சபைக் கட்டிடங்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள் போன்ற 8 சொத்து விடயங்கள் பல வருட காலமாக விளைவற்றுக் காணப்பட்டன.

## 2.5 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

சபையால் பல்வேறு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதற்காக 1989 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரை சபை உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த முற்பணப் பெறுமதி ரூபா 1,339,524 மீளத் தீர்க்கப்பட்டிராததுடன் அம் முற்பணம் உரிய செயற்பாடுகளில் பயன்படுத்தப்படுவது தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 செயற்பாடற்ற கணக்கு

கற்பிட்டி மக்கள் வங்கியில் பேணப்படுகின்ற 125–1–001–1–3101645 ஆம் இலக்க நடைமுறைக் கணக்கில் 2006 ஆம் ஆண்டு தொடக்கம் ரூபா 98,886 தொகையான மீதி காணப்பட்ட போதிலும் அக் கணக்கின் மூலம் இது வரை எவ்வித கொடுக்கல் வாங்கல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.6 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

(அ) சபைக்குச் சொந்தமான பழுதுபார்க்கப்பட்ட பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படக் கூடிய 06 வாகனங்கள் சபை நடவடிக்கைகளுக்காக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டு உக்குவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) சபைக்குரித்தான 252 – 6469 கப் வண்டியின் எரிபொருட் பயன்பாடு முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 314 லீற்றர் அதிகரிப்பைக் காண்பித்தது.

## 2.7 உள்ளகக் கணக்காய்வு

நிறுவகத்தில் போதியளவில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) வாகனக் கட்டுப்பாடு